**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE SESSIONS JUDGE,**
**MAHALIR NEETHIMANDRAM, MADURAI.**

| | |
|---|---|
| Sessions Case | - **S.C No. 200/2016** |
| Deposition of witness for | - P.W. 7 |
| Name | - Thiru. Palpandi |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **26.09.2023**

**1,2 எதிரிகள் ஆஜர் 4வது எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 படி அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேலூர் அருகில் உள்ள தும்பைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் என் பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர்கள். சந்திரகுமாரும் ஜெயலெட்சுமியும் கணவன் மனைவி ஆவர்கள். வாய்தகராறு போல் இருந்தது நாங்கள் அந்த இடத்திற்கு வந்தோம். எதற்காக சண்டை போட்டார்கள் என்று தெரியாது. நாங்கள் சமாதானமாக போகச்சொல்லிவிட்டு சென்றுவிட்டோம். 1ம் எதிரிக்கும் ஜெயலெட்சுமிக்கும் எவ்வளவு நாட்களுக்கு முன் திருமணம் நடந்தது என்று தெரியாது. திருமணத்திற்கு நான் சென்றேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை இருந்தது. இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்குவிசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

போலிசார் விசாரணையில் 1 முதல் 3 எதிரிகள் ஜெயலெட்சுமியிடம் வராதட்சணை கேட்டு அடித்து துன்புறுத்தியதாகவும் 3வயது தவசியை பித்தளை அண்டாவை வைத்து அமுத்தி 2,3 எதிரிகள் கொலை முயற்சி செய்ததாகவும் 2,3 எதிரிகள் தவசிக்கு சுன்னத் கல்யாணம் செய்து சிகிச்சை அளிக்காமல் குழந்தை இறக்கட்டும் என்று கூறியும் 3,4 எதிரிகள் வாதியின் கழுத்தை நெறித்து வயிற்றில் மிதித்து செத்தால் தான் எங்களுக்கு நிம்மதி என்று கூறியதாகவும் ரூ.50000 கொண்டுவந்தால் தான் வாழமுடியம் என்று 1வதுஎ திரி சொன்னதாகவும்அதற்கு 2 முதல் 4 எதிரிகள் ஆதரவாக இருந்ததாவும் வாதியை அடித்து துன்புறத்தியதாகவும் வாதியின் குழந்தையை கொடுமைப்படுத்தியதாகவும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் உறவினர் என்றால் சரிதான். ஆதலால் எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமா்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.